

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் செங்கோட்டை தாலுகா அலுவலகம் அருகில் உள்ள அறிஞர் அண்ணா திடலில் செங்கோட்டை நகர தி.மு.க சார்பில் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன் பங்கேற்று உரையாற்றினார். உடன் மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், கழக செய்தி தொடர்பாளர் சரவணன், கழக நிர்வாகிகள் செல்லத்துரை, ஆறுமுகச்சாமி, சேக்தாவுது, முத்துப்பாண்டி,சேசுராஜன்,ஷெரிப், கனிமொழி, கென்னடி, ரஹீம், சாமிதுரை தமிழ்செல்வி, நகர செயலாளர் வெங்கடேசன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

## நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும்

# கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு மேற்கொண்டார்!

நெல்லை, ஜன. 31 -

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில் அன்று (29.01.2026) ஆய்வு மேற்கொண்டார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.605 கோடி மதிப்பில் பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி, களக்காடு, நாங்குநேரி,வள்ளியூர், இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு நடைபெற்று வரும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் குறித்தும், ரூ.423.13 கோடி மதிப்பில் களக்காடு நகராட்சி, வடக்கு வள்ளியூர், பணகுடி, திசையன்விளை, ஏர்வாடி, திருக்குறுங்குடி, நாங்குநேரி, மூலைக் கரைப்பட்டி ஆகிய 7 பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டதில் களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சி பகுதிகளுக்கு சேரன்மகாதேவி பகுதியில் தாமிரபரணி ஆற்றில் இருந்து நீர் எடுக்கப்பட்டு கங்கனான்குளம் பகுதியில் உள்ள திருவிருத்தான் புள்ளியில் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு 24 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகிறது.பணிகள் முடிக்கும் தருவாயில் உள்ளது.மேலும் தாமிரபரணி ஆற்றில் இருந்து 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.605 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் மேலமுன்னீர்பள்ளம் பகுதியில் தண்ணீர் எடுக்கப்பட்டு,சிங்கிகுளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் பணிகள் முடிவடைந்துள்ளது. மேலும், பிரண்டமலை பகுதிக்கும் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து நீர்நிலை தொட்டிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் சோதனை பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களிடம் ஆலோசிக்கப்பட்டது.மேலும் குடிநீர் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சரிசெய்து கொடுப்பதற்கான பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின் போது, கண்காணிப்பு பொறியாளர் கருப்பையா,நிர்வாக பொறியாளர் கள் ராமலெட்சுமி,பாக்கியராஜ், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் ராஜசேகர் உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) கிறிஸ்டோபர் தாஸ், வடக்கு வள்ளியூர்,திசையன்விளை, திருக்குறுங்குடி, பணக்குடி, மூலைக்கரைப்பட்டி,நாங்குநேரி, ஏர்வாடி செயல் அலுவலர்கள், களக்காடு நகராட்சி ஆணையாளர் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை தெற்கு மாவட்டக் கழகப் பொருளாளர்

# கழக முன்னோடி கு.தங்கம் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 31 -

மதுரை தெற்கு மாவட்டம், திருப்பரங்குன்றம் தெற்கு ஒன்றியம், கொம்பாடி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.மீனவர் அணி அமைப்பாளராகவும், கழக மாநிலப் பொதுக்குழு உறுப்பினராகவும் சிறப்புடன் பணியாற்றி வந்த,கழக முன்னோடி கு. தங்கம் தற்போது மதுரை தெற்கு மாவட்டக் கழகப் பொருளாளராக இருந்து வந்தார்.

இவர் திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டு நேற்று (29.01.2026 - வியாழக்கிழமை) மாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இம்மறைவுச் செய்தி அறிந்து துயருற்ற கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மறைந்த கழக முன்னோடி கு.தங்கம் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கழகத் தோழர்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி இராமேஸ்வரம் ராமநாதசுவாமி திருக்கோவில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கருணை இல்லத்தில் தங்கிப் பயிலும் மாணவிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கையை ஏற்று அத்தியாவசிய தேவைக்கான பாய் தலையணை உள்ளிட்ட பொருட்களை இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்வில் நகர் மன்ற தலைவர் நாசர் கான், துணை தலைவர் பிச்சை என்கின்ற தக்ஷிணாமூர்த்தி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், கோவில் இணை ஆணையாளர், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு சட்டப்பேரவையில் நடைபெற்ற சட்ட விதிகள் ஆய்வு குழு கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு தலைவர், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் அறிக்கையின் மீது துறை எடுத்த நடவடிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.ஆய்வு குழு உறுப்பினர்கள் ராஜா, கண்ணன், கிருஷ்ணசுவாமி, தியாகராஜன் ரகுராமன், ஸ்டாலின்குமார், அர்ஜுனன், செந்தில்நாதன், பாலசுப்பிரமணியன், மான்ராஜ், தாரகை கத்பர்ட் இணைச் செயலாளர் தேன்மொழி துணைச் செயலாளர் உடையார்சாமி சார்பு செயலாளர் மாணிக்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மதிக்காத ஆளுநர் ரவி!

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை கருவியாகப் பயன்படுத்தி அரசியல் சட்டத்தின் மாண்புகளையும், மரபுகளையும் சீர்குலைப்பதன் மூலம் தமிழ் மாநில அரசிற்கு சங்கடங்களை உருவாக்கும் முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசுதொடர்ந்து ஈடுபட்டு வருகிறது

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அரசியல் சட்டத்தின் அடிப்படையில் குடியரசுத் தலைவரால் பணியமர்த்தப்பட்டவர் (Appointed by the President of India). அவருடைய அதிகார வரம்பு என்பது இந்திய அரசியல் சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்திய அரசியல் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில்தான் அவர் செயல்பட வேண்டும் என்பதே அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும். இந்திய ஒன்றியம் ஜனநாயகக் குடியரசு ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டுள்ளது.

எனவே, இங்கு பல்வேறு கொள்கை கோட்பாடுகள் பல்வேறு திட்டங்களால் வேறுபட்ட அரசியல் இயக்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், இந்தியா என்பது பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய பன்முகத்தன்மை கொண்டது என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

எனவே, இங்கு இந்திய ஒன்றிய அளவில் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி தேர்தல் மூலமாக ஆட்சி அமைக்கும் சூழ்நிலை உருவானாலும் இந்திய ஒன்றியத்திற்குட்பட்ட மாநிலங்களில் வேறுபட்ட அரசியல் கட்சிகள் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகள் நிரம்பவும் உண்டு என்பதை நாம் அனுபவ அடிப்படையில் கடந்த 75 ஆண்டு காலமாக பார்த்து வருகிறோம்.

இந்திய ஒன்றியத்தில் ஆட்சி அமைத்திருக்கும் அரசியல் கட்சிமட்டும்தான் மாநிலங்களிலும் ஆட்சி அமைக்கும் என்ற எதிர்பார்ப்பு எல்லா காலகட்டங்களிலும் முழுமை பெறாது. மாறாக, மாநிலங்களில் வேறுபட்ட அரசியல் கட்சிகளும் ஆட்சிஅமைக்கின்ற சூழ்நிலைகள் கடந்தகாலங்களில் உருவாகியிருக்கிறது. இன்றும்கூட அந்தச் சூழ்நிலைதான் உருவாகியுள்ளது.

இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி 2021ஆம் ஆண்டு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் அமைந்தது. முதலமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியில் அனைவரும் பாராட்டத்தக்க அளவிற்கு சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி இந்திய ஒன்றியத்திலுள்ள அனைத்து மக்களின் பாராட்டுக்களைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

திராவிட மாடல் ஆட்சியின் சட்டங்களும், திட்டங்களும் தமிழ்நாட்டில் உருவாக்கியிருக்கும் பிரமிக்கத்தக்க வளர்ச்சி கண்டு பிற மாநில அரசுகளும் இந்த சட்டங்களையும், திட்டங்களையும் பின்பற்றி தங்கள் மாநிலத்தில் வளர்ச்சி காண்பதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை அனைவரும் அறிவோம். இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய மாநிலமாகவும் “அனைவருக்கும் கல்வி”, “பெண்ணுரிமை”, “சமத்துவம்”, “சமதர்மம்”, “சகோதரத்துவம்” ஆகிய கோட்பாடுகளைக் குறைபாடின்றி நடைமுறைப்படுத்துகின்ற முதல் மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது!

**பொன். முத்துராமலிங்கம்**
*முன்னாள் அமைச்சர்*
*கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்*



தமிழ்நாட்டில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சிக்கும், கட்சிக்கும் முற்றிலும் முரண்பட்ட ஓர் மதவாத ஆட்சி ஒன்றியத்தில், பாரதிய ஜனதா கட்சி வடிவத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெறுவதால், எப்படியாவது தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியை சீர்குலைக்க வேண்டும் என்ற தீர்க்கமான திட்டத்துடன் தொடர்ந்து ஒன்றிய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள “திராவிட மாடல்” ஆட்சிக்கு எதிரான பன்முகத் தாக்குதல்களில் ஒன்றுதான் தமிழ்நாட்டின் ஆளுநர் மூலமாக சட்டப்பேரவையில் அரங்கேற்றப்படும் அரசியல் சட்டத்திற்கு முரண்பட்ட குதர்க்கமான நடவடிக்கைகளாகும். தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவரால் பணியமர்த்தப்பட்ட ஆளுநர் ஆர்.என். ரவி, தனக்கு அரசியல் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட அதிகார எல்லைகளை மீறி ஒவ்வொரு கட்டத்திலும் செயல்பட்டு கொண்டிருக்கிறார்.

சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதில் காலதாமதப்படுத்துகிறார். இதன் மூலம் சட்டத்தின் பாதுகாப்பும், திட்டத்தின் பயனும் சாதாரண சாமானிய மக்களுக்கு சென்றடைவதில் வீண் காலதாமதம் ஏற்படுவதோடு, முழுமையான பயனையும் மக்களால் துய்க்க முடியவில்லை. இதுகுறித்து, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு மிகத் தெளிவாகவும், தீர்க்கமாகவும் வழங்கியப் பின்னரும் தமிழ்நாட்டு ஆளுநர் ரவி தன் நோக்கையும், போக்கையும் மாற்றிக் கொள்ளவில்லை. இந்திய அரசியல் சட்டத்தினுடைய வரம்புகளையும், வரையறைகளையும் உச்சநீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலையும் முழுமையாக ஆளுநர் மதிக்கத் தயாராக இல்லை.

தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு என்பது ஆளுநர் பொறுப்பு அரசியல் சட்டத்தில் தொடரும் மட்டும் அதற்குரிய மரியாதையினை வழங்கிட வேண்டும் என்ற கொள்கையிலும் நிலைப்பாட்டிலும் உறுதியாக உள்ளது. அந்த அடிப்படையில்தான், தொடர்ந்து தமிழ்நாடு அரசினுடைய நடவடிக்கைகள் முதல்வரால் கட்டமைக்கப்பட்டுள்ளது எனினும் ஆளுநர் ரவி தன் எல்லை மீறிய நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளவும் இல்லை கட்டுப்படுத்தவும் இல்லை. இதன் உச்சகட்டமாக, இந்த ஆண்டு ஜனவரி திங்கள் இருபதாம் நாள் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்ட சட்டமன்ற கூட்டத்தொடரில், அரசியல் சட்ட பிரிவு 176(1)ன் கீழ் ஆளுநர் உரையாற்றிட வேண்டும். ஆனால், ஆளுநர் ஆர்.என்.ரவி அரசினுடைய கொள்கை விளக்க அறிக்கையினை சட்டமன்றத்தில் வாசிக்காமல் கற்பனையான பொய்க்காரணங்களைச் சொல்லிவிட்டு வெளிநடப்பு செய்துவிட்டார். வெளிநடப்பு செய்த ஆளுநர் அரை மணி நேர அளவில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார் என்பதிலிருந்து ஆளுநருடைய நடவடிக்கைகள் அனைத்தும் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒத்திகை பார்த்து நடத்தப்பட்ட “அரசியல் ஓரங்க நாடகம்” என்பதை நம்மாலே எளிதில் அனுமானிக்க முடியும்.

தமிழ்நாட்டின் ஆளுநரைப் போலவே எதிர்க்கட்சிகள் ஆட்சியிலுள்ள கர்நாடகத்திலும், கேரளத்திலும் இது போன்ற ஆளுநர்களின் நடவடிக்கைகள் அரங்கேறியிருக்கிறது என்பதிலிருந்து, எதிர்க்கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களில் ஆளுநர்கள் திட்டமிட்டு அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக குழப்பமானதும், குதர்க்கமானதுமான நடவடிக்கைகளை முன்கூட்டித் திட்டமிட்டு ஒன்றிய அரசினுடைய வாழ்த்துக்களோடு அரங்கேற்றியிருக்கிறார்கள் என்பதில் ஐயப்பாட்டிற்கு சிறிதும் இடமில்லை.

இந்தப் பின்னணியில் நடைபெறும் அரசியல் நாடக பாணிஅரங்கேற்றங்களைத்தெளிவாகப்புரிந்துகொண்ட தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறுகின்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் ஆளுநர் உரை என்பது அவசியமற்றது என்ற அடிப்படையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை சட்டமன்றத்திலே நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் இந்திய ஜனநாயக குடியரசில் “ஓர் வரலாற்றுத் திருப்பத்தை உருவாக்கும் திருப்புமுனை” என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அதுமட்டுமல்ல, சட்டமன்ற ஜனநாயகத்தை சிதைவின்றிக் காப்பாற்றும் தொலைநோக்கு நடவடிக்கையாகவும், தமிழக முதல்வரின் தீர்மானம் அரசியல் விற்பன்னர்களால் மதிப்பீடு செய்யப்படுகிறது!

மாநிலத்தின் ஆளுநர் ஒன்றிய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் பாலமாகச் செயல்பட்டு, பிரச்சினைகளில் சமூகத்தீர்விற்கு வழிவகுக்க வேண்டும் என்பதுதான் அரசியல் சட்டத்தின் நோக்கமும் சிந்தனையுமாகும். ஆனால், அந்தப்பணியின் நோக்கத்தையே சிதறடிக்கத்தக்க வகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கும் நடவடிக்கை என்பது முற்றிலும் அரசியல் சட்டத்தின் நோக்கத்திற்கு புறம்பானதாகும். இந்த அரசியல் சட்ட விரோத நடவடிக்கைக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் மீது குடியரசுத் தலைவர் எத்தகைய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்பதுதான் நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்களுடைய கேள்வியாகும்.

மேலும் இந்திய அரசியல் சட்ட விவாதத்தின் பொழுது பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள் மாநில ஆளுநர்களின் பங்கு என்ன என்பதற்கான விளக்கமளிக்கும்பொழுது பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் குறிப்பாக ஆளுநர்களின் பங்கு பற்றி குறிப்பிடும் பொழுது ஆளுநர் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையில், தனித்து ஆற்றிட வேண்டிய பணிகள் எதுவுமில்லை. ஆனால், ஆளுநர் நிறைவேற்ற வேண்டிய சில கடமைகள் உண்டு என்பதாகவும், ஆளுநர் என்பவர் எந்தவொரு கட்சியின் பிரதிநிதியாகச் செயல்படாமல், அந்த மாநில மக்களின் பிரதிநிதியாக செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தச் செய்தியினை “இந்து” ஆங்கில தினசரி 24.01.2026 ம் நாள் வெளியிட்டுள்ளது.

(The constituent Assembly Debates quoted Dr.B.R. Ambedkar on the Role of the Governor in Parliamentary Democracy,

“The Governor under the Constitution has no functions which he can discharge by himself; no functions at all. While he has no functions, he has certain duties to perform... He is the representative not of a party; he is the representative of the people as a whole of the State”.

THE HINDU DATED 24.01.2026)

தமிழ்நாடு ஆளுநரின் இந்த வெளிநடப்பு நடவடிக்கை என்பதும், எதிர்க்கட்சிகள் ஆட்சியிலுள்ள மாநிலங்களில், ஆளுநர்கள் அந்த மாநில அரசுகளுக்கு முரண்பாடாக மேற்கொள்ளும் தொடர்நடவடிக்கைகளும் இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டுள்ள நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், மாநிலங்களுக்கான கூட்டாட்சி முறையையும் கேலிக்கூத்தாக்கிவிடும் என்பதை கர்நாடக அரசு, ஆளுநர் பற்றிய வெள்ளை அறிக்கை வெளியிடும் பொழுது குறிப்பிட்ட செய்தியினை ஒன்றிய அரசும், குடியரசுத் தலைவரும் அவசர அவசியமாக கவனத்தில் எடுத்துக்கொண்டு உரிய அரசியல் சட்டத் திருத்தத்தை (Constitutional Amendment) கொண்டுவர உடன்நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கர்நாடக அரசின் வெள்ளை அறிக்கை அடியின் கீழ்க் கண்டவாறு எச்சரிக்கிறது.

“In the process, the federal principle as well as the norms of democracy have suffered grievously. The State's autonomy is violated. Its people are denied the right to be governed by its elected representatives. In accordance with the established conventions of the parliamentary system as was clearly envisaged by the Founding Fathers of the Constitution”.

(White Paper on the office of the Governor Constitutional Position and Political Perversion Page No 42)

மாநில ஆளுநர்களின் அரசியல்சட்டவிரோத நடவடிக்கைகளாலும், எதிர்க்கட்சிகள் ஆட்சியிலுள்ள மாநிலங்களின் ஆளுநர்கள் ஒன்றிய ஆளுங்கட்சியின் பிரதிநிதியாக செயல்படுவதாலும், நாடாளுமன்ற ஜனநாயகம், கேலிக்குரியதாக ஆக்கப்படுகிறது. இந்தப் போக்கு நீடித்தால், இந்திய நாட்டின் ஒற்றுமை கேள்விக்குறியாகிவிடும் என்ற எதார்த்த நிலைமையை உணர்ந்து, ஒன்றிய அரசு, தமிழ்நாடு முதல்வர் முன்மொழிந்த அரசியல் சட்டத்திருத்தத்தை உரிய நாடாளுமன்ற நடவடிக்கையின் மூலம் நிறைவேற்றி நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரத்தையும் இந்திய அரசியல் சட்டப்படி உறுதிசெய்ய வேண்டுமென்பதே அனைத்து மக்களின் ஒட்டுமொத்த குரலாகும்.

ஆம்! ஜனநாயகத்தில் மக்கள் குரலே வெல்லும்!!